# இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை

# பணியாளர் வெற்றிடங்கள்

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை (CAASL) மூலோபாய திட்டமிடல், தொழில்முறை வழிகாட்டுதல் மற்றும் கடுமையான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் நன்கு நிறுவப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பின் கீழ், தேசிய சட்டத் தேவைகள் மற்றும் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARPs) இணங்க பாதுகாப்பான, திறமையான, வழக்கமான மற்றும் சுற்றுச்சூழல் நட்புடன் தேசிய சிவில் விமான சேவை அமைப்பின் செயற்பாட்டை உறுதி செய்கிறது. இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையானது பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் சிறந்த தகுதி மற்றும் விரிவான அனுபவத்தைக் கொண்ட ஆற்றல் மிக்க, அனுபவமுள்ள மற்றும் சுய உந்துதல் கொண்ட பணியாளர்களைத் தேடுகின்றது.

## பணிப்பாளர் (சுற்றாடல், ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டங்கள்)
## Director (Environment, Research and Projects)
**பதவிக் குறியீடு HM-1-1-D4 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்:** (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 140,640– 15 x 4,100 -202,140 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் - 2027-01-01ஆம் திகதியில் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 190,699.00 ரூபாவாகும். (சொந்த வாகனத்தைப் பயன்படுத்துவதானால் போக்குவரத்துக் கொடுப்பனவு உட்பட)
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**விருப்பத் தேர்வு 1**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டங்கள், விஞ்ஞானம், முகாமைத்துவம் அல்லது கலைத் துறையில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம். எவ்வாறாயினும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் துறையில் இளமாணிப் பட்டத்தைக் கொண்டுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மற்றும்

பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்

மற்றும்

கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம், அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் அனுபவம்.

**விருப்பத் தேர்வு 2**

பட்டப் பின்படிப்பு தகைமை (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் துறையில் முதுமாணி) அல்லது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்

மற்றும்

கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம், அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் துறையில் குறைந்தபட்சம் பதின்மூன்று (13) வருடங்கள் அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**விருப்பத் தேர்வு 1**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்

**விருப்பத் தேர்வு 2**

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்

மற்றும்

கடந்த ஐந்து (5) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்

மற்றும்

கடந்த ஐந்து (05) வருடங்களுக்கான வருடாந்த செயற்றிறன் மதிப்பீட்டில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.

## சிரேஷ்ட சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (விமான நிலைய பாதுகாப்பு)
## Senior Civil Aviation Inspector (Airport Security)
**பதவிக் குறியீடு MM-1-1-AS1 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்:** (சம்பள அளவு (MM 1-1) - ரூபா 91,690 -10 x- 2,480-15 x 3,450- 168,240 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் - 2027-01-01ஆம் திகதியில் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 157,030.00 ரூபாவாகும்.
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 85,000.00 ரூபா.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**விருப்பத் தேர்வு 1**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம் சகிதம் விமான போக்குவரத்து அல்லது விமான சேவைகள் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கத் திணைக்களம் / பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் நிறைவேற்றுத்தர கொள்ளளவில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம்

**விருப்பத் தேர்வு 2**

பதவி தொடர்பான விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் விமானப் போக்குவரத்து அல்லது விமானசேவைகள் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள அரசாங்கத் திணைக்களம்/ பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் நிறைவேற்றுத்தர கொள்ளளவில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடங்கள் தகைமைக்குப் பின்னரான அனுபவம்

**விருப்பத் தேர்வு 3**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம்/ வாழ்தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் 7ஆம் நிலைக்குக் குறையாத தேசிய தொழிற்றிறன் தகைமை தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் விமானப் போக்குவரத்து அல்லது விமானசேவைகள் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள அரசாங்கத் திணைக்களம்/ பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் நிறைவேற்றுத் தர கொள்ளளவில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடங்கள் தகைமைக்குப் பின்னரான அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**விருப்பத் தேர்வு 1**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்

**விருப்பத் தேர்வு 2**

சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (விமான நிலைய பாதுகாப்பு), சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (விமான நிறுவன பாதுகாப்பு), சிவில் விமான சேவைகள் பரீட்சகராக (பாதுகாப்பு, தரநிலை) குறைந்தபட்சம் ஆறு (06) வருட கால சேவை அனுபவம்.

மற்றும்

கடந்த ஆறு (06) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்

மற்றும்

விமான பாதுகாப்புத் துறையில் நான்கு (04) வாரங்களுக்குக் குறையாத ICAO ஒப்புதல் அளிக்கப்பட்ட பயிற்சிக் கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

மற்றும்

வருடாந்த செயற்றிறனில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.

## சபைச் செயலாளர்
## Board Secretary
**பதவிக் குறியீடு MM-1-1-DM -3 பதவிகளின் எண்ணிக்கை - 01**

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (MM 1-1) - ரூபா 91,690 -10 x- 2,480-15 x 3,450- 168,240 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் - 2027-01-01ஆம் திகதியில் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 157,030.00 ரூபாவாகும்.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, தொடர்பாடல் வசதிகள்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் விருப்பத் தேர்வு 1 அல்லது 2)**

**விருப்பத் தேர்வு 1**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் LLB பட்டம் சகிதம் சட்டத்தரணியொருவராகவிருத்தல்.

மற்றும்

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பதவியுடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**விருப்பத் தேர்வு 2**

பதவி தொடர்பான விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் பட்டய கூட்டுவர்த்தக செயலாளராக இருத்தல் அதில் பதவியுடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்

## சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (காற்றுத்தகுதி)
## Civil Aviation Inspector (Airworthiness)
**பதவிக் குறியீடு MA 5-3-AW பதவிகளின் எண்ணிக்கை - 03**

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (MA5-3) - 79,440 - 10 x - 2,040-20 x 2,230 - 144,440 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் - 2027-01-01ஆம் திகதியில் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 122,795.00 ரூபாவாகும்.
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 215,000.00 ரூபா.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் விருப்பத் தேர்வு 01 அல்லது 02)**

**விருப்பத் தேர்வு 01**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பொறிமுறை/ மின்சாரம்/ இலத்திரனியல் / தொலைத்தொடர்பாடல் / விமானப் பொறியியல் துறையில் நான்கு (04) வருட காலத்திற்குக் குறையாத பொறியியல் இளமாணிப் பட்டம் சகிதம் ஒரு (01) வருட நிறைவேற்றுத் தர அனுபவம் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட மேற்கூறப்பட்ட துறைகளுக்கான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா.

**விருப்பத் தேர்வு 02**

B.1.1 அல்லது B.1.2 வகுதி சகிதம் விமான பராமரிப்பு உரிமைத்தைக் கொண்டவர் அத்துடன் பறக்கும் பயிற்சி பாடசாலை அல்லது விமானப் பராமரிப்புப் பொறியியலாளராக இரண்டு (02) வருட கால அனுபவம்

### வயதெல்லை

<table>
<tr><th>பதவிகள்</th><th>வயதெல்லை</th><th>குறிப்புகள்</th></tr>
<tr><td>பணிப்பாளர்</td><td>35 - 55 வயதுக்கிடையில்</td><td rowspan="2">இலங்கை விமானப்படை, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம், உள்ளூர் விமான சேவைகள் அல்லது பறக்கும் பாடசாலைகள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.</td></tr>
<tr><td>சிரேஷ்ட சிவில் விமானசேவை பரீட்சகர்/ சிவில் விமானசேவை பரீட்சகர்</td><td>22 - 45 வயதுக்கிடையில்</td></tr>
<tr><td>சபைச் செயலாளர்</td><td>22 - 45 வயதுக்கிடையில்</td><td>உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.</td></tr>
</table>

- மேலதிக தகவல்கள், பதவி விபரங்கள், விசேட தொழில்நுட்பக் கொடுப்பனவிற்கான தேவைப்பாடுகள் மற்றும் நிலையான விண்ணப்பப் படிவத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் www.caa.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இந்த அலுவலகத்திற்கு 2025-05-26ஆம் திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை employment@caa.lk எனும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பலாம். மின்னஞ்சலில் அனுப்பும் போது விண்ணப்பிக்கும் பதவி / பதவிகளின் பெயரை விடயத் தலைப்பில் (subject line) உள்ளடக்குவதை உறுப்படுத்திக் கொள்ளவும். சகல சமர்ப்பிப்புகளும் அங்கீகரிக்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த பதவி / பதவிகளுக்காக தகுதியை நிருபிக்க தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கான ஆவண ஆதாரங்களின் பிரதிகளுடன் இணைத்து அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.
- நிலையான விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் சேவை செய்யும் விண்ணப்பதாரர்கள் நிறுவனத்தின் தலைவர் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதானால் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

**சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை,**
**இல. 152/1, மினுவங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**
**2025-05-11.**